# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411, விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, மாசி 4, மாசி 4 (16-2-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 26


## வெளிநாட்டு ஏடுகளில் வெற்றிச் செய்தி!




தமிழ்த் தந்தை மூதறிஞர் செல்வாவின் மாபெரும் வெற்றிக்கு அரசின் கைப் பொம்மைகளான ஈழத்து ஆங்கில நாளிதழ்கள் முக்கியத்துவம் தராது மூடி மறைத்தாலும்—சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய ஆங்கில ஏடுகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. அவற்றின் "போட்டோ ஸ்ராட்" புகைப்படமே மேலே காணப்படுகிறது.

# ஐ. நா. சபைக்கு மூதறிஞர் செல்வாவை அழையுங்கள்!

## மனித உரிமைக் குழுவுக்கு உலகத் தமிழ் இளைஞர் பேரவை கோரிக்கை!

பாலஸ்தீனிய மக்களின் பிரச்சினைகளை உலக அரங்கில் எடுத்துச் சொல்வதற்கு பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவரை ஐ. நா. சபைக்கு அழைத்தது போல் — 25 ஆண்டுகாலமாக விடுதலைக்குப் போராடி வரும் ஈழத் தமிழினத்தின் பிரச்சினைகளை உலக அரங்கில் எடுத்துச்சொல்வதற்கு ஈழத் தமிழர் தலைவர் மூதறிஞர் செல்வாவுக்கும் ஐ. நா. சபையில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று ஐ. நா. சபையின் மனித உரிமைக்குழுவுக்கு உலகத்தமிழ் இளைஞர் பேரவை அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது.

காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவுற்ற பின்னர், கடந்த 10-2-75ல் சென்னையில் டாக்டர் இரா. சனார்த்தனம் எம். ஏ. அவர்கள் தலைமையில் சென்னையில் கூடிய உலகத் தமிழ் இளைஞர் பேரா

—5-ம் பக்கம் பார்க்க

## விதாசாரப்படி வி. பி. செல்வாக்கு வீழ்ச்சி!

### புள்ளி விபரம் காட்டுகின்ற உண்மை இதோ!

அரசாங்கக் கட்சியின் சார்பில் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிட்டு மண்கவ்விய திரு. வி. பொன்னம்பலத்துக்கு சென்றபொதுத் தேர்தலை விட நடைபெற்ற இடைத் தேர்தலில் 1293 வாக்குகள் அதிகரித்திருப்பதாக சொல்லப்பட்டபோதிலும்— விதாசாரத்தைப் பொறுத்தவரை சென்ற பொதுத்தேர்தலில் கிடைத்ததை விட ஒரு சதவிதம் குறைவான வாக்குகளே இடைத்தேர்தலில் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

1970 பொதுத் தேர்தலில் 30,663 பேர் வாக்களித்தனர். இதில் 13,520 வாக்குகள் தந்தை செல்வாவுக்கும் (அதாவது 44வீதம்) 8164 வாக்குகள் வி. பொ வுக்கும் (அதாவது 27வீதம்) கிடைத்திருக்கிறது.

நடைபெற்ற இடைத் தேர்தலிலோ 35737 பேர் வாக்களித்துள்ளனர். இதில் 25927 வாக்குகள்—அதாவது வாக்களித்தவர்களின் தொகையில் 73 சதவீதம் — தந்தை செல்வாவுக்கு

—5-ம் பக்கம் பார்க்க

### அடுத்த இதழ்

அடுத்த (23.2.75) சுதந்திரன் இதழ் டாக்டர் இரா. சனார்த்தனம் திருமணச் சிறப்பிதழாக வெளிவருகிறது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். —ஆர்.




### செல்வாவின் வெற்றி, சென்னையில் எழுச்சி!

தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் வெற்றிவாகை சூடியதையடுத்து தமிழ் நாட்டுத் தலைநகரான சென்னையில் முக்கிய வீதிகளில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டியின் "போட்டோ ஸ்ராட்" பிரதியையே மேலே பார்க்கிறீர்கள். இந்தச் சுவரொட்டியை உலகத் தமிழ் இளைஞர் பேரவை வெளியிட்டுள்ளது.

## தனி நாடு கோரிக்கைக்கு முஸ்லிம்களும் ஆதரவு தருவர்!

### கல்முனை உதுமாலெவ்வை அறிக்கை!

"இந்துக்களும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் சமாதானமாக வாழக் கூடியதும் தமிழ் மொழி ஆட்சி நடத்தக் கூடியதுமான ஓர் தனித்தமிழ் நாடு கோரும் கொள்கைக்கு முஸ்லிம் மக்களும் தங்கள் முழு ஆதரவையும் வழங்குவதுடன் உடன் என்பும் உறுதியும் கொண்டு உழைத்து வெற்றிபெற இடசங்கற்பம் கொள்வோம்!"

—இவ்வாறு சென்ற பொதுத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டவரும் தமிழரசுக்கட்சி உறுப்பினருமான டாக்டர் உதுமாலெவ்வை சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவரது அறிக்கை முழுவதும் அடுத்த



## கொழும்பில் வெடிகொழுத்தி தமிழ் மக்கள் குதூகலம்!

7-2-75 அதிகாலை 2 மணிக்கு தந்தை செல்வாவின் வெற்றிச் செய்தியை வானொலி அறிவித்ததும், கொழும்பில் தமிழர் வாழும் இடங்கள் முழுவதும் வெடிகள் கொளுத்தப்பட்டன. வெள்ளவத்தையில் குமார சூரியர் வீட்டுக்கு முன்பும் வெள்ளவத்தை பொலிஸ் ஸ்டேசன் முன்பும் வெடிகள் கொழுத்தி தமிழர்கள் தங்கள் குதூகலத்தை தெரிவித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## தகுதிபெற்றோர் - 398 அனுமதி ஆக 50 பேருக்கு!

இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியம், உயிரியல் (பல் வைத்தியம், மிருக வைத்தியம், விவசாயம் உட்பட) யாழ் மாவட்டத்திலிருந்து இந்த ஆண்டு தகுதிபெற்ற 398 தமிழ் மாணவர்களில் ஆக 50 பேருக்கே அனுமதி கிடைத்துள்ளது. 348 தமிழ் மாணவருக்கு குழிபறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# "உண்மை எங்கிருக்கிறது என்பதை வெளிக்காட்டிவிட்டனர் காங்கேசன் மக்கள்! செல்வா பெற்ற பெரும் வெற்றி அதிசயிக்கத்தக்கது!"

'காங்கேசன் தீர்ப்பு' என்ற தலைப்பில் வீரகேசரி 8-2-75 இதழில் தீட்டப்பட்டிருந்த ஆசிரியத் தலையங்கம் வருமாறு:—

இலங்கை மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. தமிழர் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 25,927 வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடியிருக்கிறார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய முன்னணி அபேட்சகர் திரு. வி. பொன்னம்பலம் 9,457 வாக்குகளும், சுயேச்சை வேட்பாளரான திரு. மு. அம்பலவாணர் 185 வாக்குகளும் பெற்றிருக்கின்றனர். அதாவது, தமிழர் கூட்டணித் தலைவரான திரு. செல்வநாயகம் யாவரும் அதிசயிக்கத்தக்கவகையில் 16,470 பெரும்பான்மை வாக்குகளால் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

மொத்தம் 41,227 பதியப்பட்ட வாக்காளரைக் கொண்ட இத்தொகுதியில் தமிழர் கூட்டணித் தலைவருக்கு 25,927 வாக்குகள் கிடைத்திருக்கிறது என்றால், இத இன்றைய சூழ்நிலையில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை எவரும் ஏற்றுக்கொள்ளாதிருக்க முடியாது.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை இலங்கை வாழ் தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை என்பதை இடைத்தேர்தல் ஒன்றின் மூலம் நிரூபித்துக்காட்டுவதற்காக அரசுக்குச் சவால் விட்டு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது எம். பி. பதவியைத் துறந்து சென்றதன் விளைவாகவே இந்த இடைத்தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அதுவும், அவர் சவால் விட்டு ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னரே இன்றைய அரசு இவ்விடைத் தேர்தலை நடத்தியிருக்கிறது. இந்த தருணத்தில், புள்ளி விபரங்கள் காட்டும் சில உண்மைகளை நாம் உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் 1,356 அதிகப்படியான வாக்குகளைத்தான் பெற்றிருந்தார். ஆனால், வியாழன்று நடைபெற்று முடிந்த இடைத் தேர்தலில் அன்று பெற்ற பெரும்பான்மையிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகப்படியாகவே பெற்றிருக்கிறார்.

இதனை நடுநிலை நின்று ஆராயப் புகின் சில உண்மைகள் தெட்டத் தெளிவாவதை நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இலங்கை வாழ் தமிழ் மக்கள் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தினை ஏற்கவில்லை. அவர்கள் இன்று இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்பட்டு ஆளப்படுகின்றனர். தமிழ் மாணவரின் எதிர்காலத்தினை நாசமாக்கும் பொருட்டுத்தான தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டிருக்கிறது. அரசினர் துறையிலும், தனியார் துறையிலும் தமிழ் மக்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்படுகின்றனர். கைத்தொழிலிலோ, விவசாயத்திலோ அவர்கள் போதிய உதவிகளைப் பெறுவதில்லை. கொழும்பில் அரிசி விலை ஒன்றென்றால் அதனிலும் பார்க்க மும்மடங்கு விலையைக் கொடுத்துத்தான் விவசாயப் பூமியான யாழ்ப்பாணத்தில் அரிசியைப் பெற வேண்டியிருக்கிறது. இவையும், இவைபோன்ற பிறவுமே பிரசாரக் கூட்டங்களில் தமிழர் கூட்டணியினர் சுமத்திய குற்றச்சாட்டுக்களாகும்.

இவற்றிற்குப் பதிலளித்த அரசு தரப்பினர் வேண்டுமென்றே இனவாதத்தினை அவர்கள் கிளப்பி வருவதாகப் பறைசாற்றினர். இன்றைய அரசுதான் உண்மையான சோசலிசத்தை உருவாக்க இதய சுத்தியுடன் பாடுபடுகிறதென்றும் நாட்டப்பட்ட இலங்கையில் முழுமையான தேசியவாதத்தின் மூலமே நாட்டு மக்கள் அனைவரும் முன்னேற முடியும் என்றும் பதிலிறுத்தனர் தமிழர் கூட்டணியினர் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும் அவர்கள் பதிலளிக்கத் தவறியதில்லை.

இந்நிலையில் காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் இவை யாவற்றினையும் அலசி ஆராய்ந்த பின்னரே தமது தீர்ப்பினை அளித்திருக்கிறார்கள் என்றுதான் நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது. உண்மை எங்கிருக்கின்றது என்பதை எவ்வித சந்தேகத்துக்குமிடமின்றி அவர்கள் அப்பட்டமாகவே வெளிக்காட்டிவிட்டார்கள். இதனை அரசு உணர்ந்துகொண்டால் நாட்டிற்கு நல்லதென்பதை நாம் கூற விரும்புகின்றோம்.

## பரிதாபத்துக்குரிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்!

# இவர்களை இனங்காட்டுகிறோம்! இதோ கண்டு கொள்ளுங்கள்!

காங்கேசன்துறைத் தேர்தல் சம்மந்தமாக அறிக்கை விடுத்திருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற் பலர் யார் என்பதனையும், அவர்களது சுயரூபம் என்ன என்பதையும், அவர்களது, எண்ணம் என்ன என்பதனையும் எடுத்துக்காட்டி அவர்களது முகமூடியைக் கிழித்தெறிவது மாணவர்களாகிய எங்களது தவிர்க்க முடியாத கடமையாகும். தமிழர் கூட்டணிக்காக வக்காலத்து வாங்க நாம் முயலவில்லை. இந்த அறிக்கையை யார் வெளியிட்டுள்ளார்களென்பதை இனங்காட்ட முயலுகிறோம். தமிழர் பிரச்சினைக்குக் காரணம் தவிர்க்க முடியாத பொருளாதாரச் சிக்கலே என்று கூறிப் பொதுவுடமைத் தத்துவக்கு மாசு கற்பிக்க முயன்றுள்ள இவர்கள் யார்?

முருகன் கோவிலை வீதிவலம் வருவோர்கள், 'பார்'களிலிருந்து வெளியேறும் போது மட்டுமன்றி பாதை தெரியாது எந்நேரமும் நடப்பவர்கள், "குயின்ஸ் லொட்டலையும்" ஆங்கிலத் திரைப்படம் ஓடும் படமாளிகைகளையும் அடிக்கடி தரிசிக்கும் குட்டி 'பூர்ஷ்வா'க்கள், கோட்டும் சூட்டும் சுழற்றுமன் "போக்காலும் ஷப்புளையும்" "ஹம்லட்டும், மட்டனும், பீவ்வும்" சாப்பிடுகின்ற, "கம்சுருபற்றிய", "ஜல்தூரவலே ஆண்டுவ" என்று கூவிக்கு மாரடித்துக் கொண்டு திரிகிற, சிங்கள ஏகாதிபத்தியம் விட்டெறியும் எலும்புத் துண்டுகளுக்கு ஏங்கித் தவிக்கும் "சொறி நாய்கள்" இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியும், இன ஒற்றுமையைப் பற்றியும், சமத்துவத்தைப் பற்றியும், பேசுவதற்கு?

இவர்கள் தங்களது கடமையைச் சரிவரச் செய்கிறார்களா? தமிழ் மாணவர்களின் வசதியீனங்களை உயர்பீடத்துடன் கதைப்பதற்குப் பயப்படுகிறார்கள், வெட்கப்படுகிறார்கள். இவர்களது கையாலாகாத்தனத்தையும், அடிவருடிப்பு வேலைகளையும் அடுக்கிக்கொண்டே போகலாம். உதாரணத்துக்கு ஒன்றிரண்டை நோக்கலாம். வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் பயிலுகின்ற தமிழ் மாணவர்களுக்கு எத்தனை நிரந்தர விரிவுரையாளர்கள் உள்ளார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாது என்று காட்ட முனைகிறார்கள். முன்னேற்றமான அத்தியாவசியமான துறைகளில் தமிழ் மாணவர்கள் படிப்பதைத் தங்கள் சுயநலத்துக்காகத் தடுத்து நிறுத்தியவர்கள். இவர்கள் காங்கேசன்துறைத் தேர்தலை முட்டுக்கட்டையாக்கினார்கள் மலையகத்தில் இருந்து [illegible] உணவு உடையின்றி, உடுக்க உடையின்றி தினசரி இறந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களைப்பற்றிப் பேசினுலே வெட்கமென்று கருதுகின்ற இந்தப் பச்சோந்திகளுக்குப் பொதுவுடமை பற்றிப் பேசத் தகுதியில்லை.

தமது பதவிகளைக் காப்பாற்றத் "தரப்படுத்தல் மிகவும் சிறந்தது" என்று அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கியவர்கள், அரசாங்கமே அது தவறு என்றவுடன் மூக்கறுபட்டு நிற்கிறார்கள்.

காங்கேசன்துறை இடைத்தேர்தல் எதற்காக ஏற்பட்டது என்று இவர்களுக்குத் தெரியாது என்பது இவர்களது சிறுபிள்ளைத்தனமான அறிக்கையால் வெளிப்படுகிறது. புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றும் கூட உத்தரவாதப் படுத்தப்படவில்லை. இதைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை அரசாங்கத்துக்கு அறிவிப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய ஒரேயொரு சட்டபூர்வமான நடவடிக்கையின் விளைவே காங்கேசன்துறை இடைத்தேர்தல். இந்த அரசியல்திட்டம் தமிழ் மக்களது உரிமைகளைப் பறித்ததோடு, எந்தவொரு பாதுகாப்பையும் தரவில்லை, என்பதை எடுத்துக்காட்டுவது தமிழ் மக்களுக்குள்ள உரிமை. இதை "இன்ரலெக்சுவல்கள்" அறியட்டும்!

இவர்களுக்கு இலவிடயம் புரிந்துள்ளதா? புதிய அரசியற்திட்டத்தில் சில மக்களை இனமொழி அடிப்படையில் அவர்களது உரிமைகள் மறுக்கப்படுவதாக உள்ளமை தேசிய ஒற்றுமைக்குத் தீங்கு விளைக்குமென்பதை இவர்கள் ஒத்துக்கொள்ளத்தானே வேண்டும். அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களது உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்ற கசப்பான உண்மையை இவர்கள் மறுக்க முடியாது. அத்தோடு இந்த மனிதாபிமானமற்ற செயலுக்காகத் தாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்ததாக கலப்பற்ற பொய்யையும் கூறமுடியும்.

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதை இத்தகைய ஒரு தேர்தல் மூலம் ஏகாதிபத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டுவதன் மூலம் அவர்களுக்கு நியாயம் வழங்க வைப்பது தேசிய ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்ற எளிய உண்மை இந்த அரைப் "பீனசம்"க்களுக்கும், முழுப் "பீனசம்"க்களுக்கும் விளங்கியிருக்கத்தான் வேண்டும். அவ்வாறுயின் இவர்கள் ஏன் காங்கேசன்துறைத் தேர்தலின் அடிப்படைப் பிரச்சினைக்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு மிடையில், "மொட்டந்தலைக்கும் முழங்காலுக்குமிடையில் முடிச்சுப் போடுவது போன்ற செயலைச் செய்து, தமது நாடு பற்றிய அறிவை வெளிக்காட்டுகிறார்கள்?

இத்தகைய பிதற்றல்களுக்கு, காட்டிக்கொடுக்கின்ற நயவஞ்சகச் செயல்களுக்கும் காரணம் இல்லையா? காரணம் உண்டு, அதை நாம் அறிவோம், ஆனால் அந்த நாற்றமெடுக்கும் உண்மைகளை வெளியில்

—6-ம் பக்கம் பார்க்க

## எங்கள் வெற்றி

—திருக்கோணமலைக் கவிராயர்

காங்கேசன்துறைக் களத்தின் வெற்றி
தூங்காத் தமிழர்கள் தாய்மையின் வெற்றி
ஏங்கிக் கிடந்த எழில் தமிழ்ச் சாதியின்
எதிர்காலத்தை உணர்த்தும் வெற்றி

சிங்கத் தமிழரின் சிந்தனை வெற்றி
செகமுள தமிழர்கள் அகமெழும் வெற்றி
எங்கள் பருதியை, மொழியைப் பறிக்கும்
எச்சி நாய்களை வீழ்த்திய வெற்றி

தங்கத் தமிழர் தனி நாடமைக்கும்
தவ நாள் மலரும் தனிப் பெரும் வெற்றி
எங்கள் வெற்றி—எங்கள் வெற்றியே
பொங்கும் அன்னை பூரிக்கும் வெற்றியே

## வசாவிளானில் செல்வாவுக்கு வரவேற்பு!

9.2.75ல் தந்தை செல்வநாயகம் அவர்கட்கு வசாவிளான் சென். யேம்ஸ் கோவில்பற்று மக்களால் ஒரு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குள்ள மாதர் முன்னேற்றச்சங்கத்தினரால் சென். யேம்ஸ் தேவாலயத்தில் விசேச செப ஆராதனையும் நடத்தப்பட்டது. இவ்வைபவத்தின்போது ஊர்மக்கள்பெருவாரியாக திரண்டிருந்தார்கள். மேற்படி சங்கச் செயலாளர் செல்வி யா. யோகமணி அவர்களால் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. தந்தை அவர்கள் நன்றி கூறி விடைபெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் மேடை

# தீ பரவட்டும்!

அன்பு நண்பா,

எட்டு அமைச்சர்களின் உருட்டல் மிரட்டல்கள்—

திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட பொய்ப் பிரசாரங்கள்!

ஆட்சியாளர்களின் அதிகாரம், ஆள் அம்பு, ஆணவம்,

அள்ளி வீசப்பட்ட அற்பத்தனமான சலுகைகள்—

ஏவி விடப்பட்ட வன்முறைகள்—

எமக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட அதிகார பலம், பணபலம், பத்திரிகைப் பலம்—

—இத்தனையையும் முறியடித்து — வீங்கு கடந்தோனுயர்த்தி — சங்கிலி அடிமையாக வாழாது ஈழத்தமிழினம்; தாங்கிக் கிடக்காது இனியேனும் உமது கொடுமைகளை; பேழையைப் போல அது வீறுகொண்டெழுந்து வேண்டாம் உமது சிங்கள ஏகாதிபத்திய அரசியல் சட்டம் என்று நிராகரித்து—விடுதலை பெற்ற தனித் தமிழ் ஈழத்தை உருவாக்குவதென முடிவெடுத்துவிட்டது என்பதனை ஆட்சியாளருக்கு பெப்ரவரி ஆறும் நாளில் அறுதியிட்டுரைத்து விட்ட காங்கேசன்துறைத் தொகுதியின் எனதருமை தமிழ் மக்களை எண்ணும்போதெல்லாம் இதயம் பூரிக்கிறேன்! தந்தை செல்வாவுக்கு— தமிழர் விடுதலைச் சின்னமான வீட்டுக்கு—வாக்களித்து தமிழ்மானம் காத்திட்ட 25927 வீரத்தமிழர்களின் கறைபடியாத் திருக்கரங்களில் எனது அன்பு முத்தங்களைப் பதிக்கிறேன்!

ஆம் நண்பா, 1975 பெப்ரவரி ஆறும் நாளை ஈழத்தமிழர் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத நாளாக—தமிழர்களின் உறுதியை—வீர சுதந்திர இலட்சியத்தை உலகறியச் செய்திட்ட வெற்றித்திருநாளாக—ஆக்கித் தந்திட்ட காங்கேசன்துறைத் தொகுதியின் மானத் தமிழர்களுக்கு—மறத்தமிழ் மங்கையருக்கு—இளைய தமிழ் வீரர்களுக்கு—எஃகு நெஞ்சக் காளையருக்கு — மாணவ மாணவியருக்கு — 35 இலட்சம் தமிழ் மக்களும் இன்றைக்கு தலை வணங்கி நிற்கிறார்கள்! பெப்ரவரி ஆறும் நாளை எண்ணும் போது 'இன்ப நாளிது—இதயம் பாடுது' என்று பூரித்த மகிழ்வுடன் பாடியாடிடத் தோன்றுகிறது எனக்கு!

காலங்கடத்தி இடைத் தேர்தலை நடத்தினால்—தமிழனுடைய சுதந்திர உணர்ச்சி மங்கி மறைந்துவிடும்; ஆர்வம் குன்றிவிடும்; தமிழினம் தூங்கிவிடும்; அப்போது பார்த்து தமிழ் ஈழத்துக்குள் நுழைந்து அற்ப சலுகைகளை வீசி இறைத்து அரசியல் சட்டமெனும் அடிமை சாசனத்துக்கு ஈழத்தமிழனின் ஒப்புதலைப் பெற்றிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டிருந்த சிங்கள ஏகாதிபத்தியத்தினதும், அதன் ஏதுவாட்களான—கருங்காலிகளான — தமிழ் விரோதிகளினதும் முகத்தில் பட்டை நாமம் சாத்தி—செருப்படி கொடுத்து—தமிழ் ஈழத்திலிருந்து ஓட ஓட விரட்டியடித்து—தமிழனின் மானமும் வீரமும் சுதந்திர நாட்டமும் அடிமைத்தனத்தை அறுத்தெறிய வேண்டுமென்னும் ஆவேசமும்— சில நேரங்களில் நீறுபூத்த நெருப்பாக இருந்தாலும் இருக்குமே தவிர— ஒருபோதுமே மங்கிமடியாது என்பதனை துல்லம்பரமாக எடுத்துக்காட்டிவிட்டனர் காங்கேசன்துறை மக்கள்!

மாவும் சீனியும், மது போதையும், சேலையும் வலையும், இடமாற்றத்தும், வீடு கட்டும் கடனும், உத்தியோகம் தருவோம் எனும் ஆசைவார்த்தைகளும் — சங்கக் கடைகளில் வேலையும் ஜே. பி. பட்டங்களும் — இவை போன்ற இன்னபிற அற்ப சலுகைகளுமல்ல ஈழத்தமிழன் இன்று வேண்டுவது — அவன் வேண்டி நிற்பது யாராலும் மறுக்கமுடியாத அவனது சுயநிர்ணய உரிமையை! தன்னைத் தானே ஆளும் உரிமையை!! 1833ம் ஆண்டு இழந்த தனது அரசுரிமையையே ஈழத்தமிழினம் மீண்டும் நிலைநாட்டிடத் துடித்து நிற்கின்றது என்பதனை — வீரசுதந்திரம் வேண்டி நிற்கின்ற தமிழ்க்குலம் வேறொன்றும் நாடாது என்பதனை—35 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் ஐயந்திரிபற சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு உறைப்பாக எடுத்துக்காட்டிவிட்டனர் காங்கேசன்துறை வாக்காளர்கள்!

நண்பா—புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்று நான் கூறுகிறேன்; இல்லை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாக நீ கூறுகிறாய்! சரி, உனது கூற்றை நிரூபிப்பதற்கு நானே உனக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித்தருகிறேன்—நான் காங்கேசன்துறை உறுப்பினர் பதவியை உதறியெறிகிறேன்—இடைத்தேர்தல் ஒன்று அப்போது உருவாகும்; வா, மக்கள் மன்றத்தின் முன்னால் போவோம்; சனநாயகக் களத்தில் மோதுவோம்; மக்கள் நீ சொல்வதை ஆதரித்தால் நான் அரசியலிலிருந்தே ஒதுங்கிவிடுகிறேன்; நான் சொல்வதை ஆதரித்தால்— புதிய அரசியலமைப்பை தமிழ மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பொய் பேசித் திரிவதை நீ நிறுத்து! —இதுதான் மூதறிஞர் செல்வா அவர்கள் 1972ம் ஆண்டு அக்டோபர் 3ம் நாள் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு விடுத்த சவாலாகும்!

ஆம்—புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதனை ஆட்சியாளருக்கும்—அகிலத்துக்கும் எடுத்துக்காட்டுவதற்காக மூதறிஞர் செல்வா அவர்கள் உருவாக்கிய இடைத்தேர்தல் — 'ஒரு கல்லில் இரு மாங்காய்' என்று கூறுவதுபோல புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நி[illegible]ராகரித்திருப்பதை எடுத்துக்காட்டிட மட்டும[illegible]—அவர்கள் சுதந்திர மக்களாக வாழ[illegible] தங்கள் நாட்டை தாங்களே ஆள விரு[illegible]கிறார்கள்—தனிநாடு அமைக்கத் துடித்து[illegible]றார்கள் என்பதையும் ஆணித்தரமாக ஆ[illegible]ளர்களுக்கும் அகில உலகத்துக்கும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு வாக்கெடுப்பாகவும் அமைந்துவிட்டது!

35 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் — காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள 73சத விதமான தமிழ் வாக்காளர்கள் புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்திருப்பது மட்டுமல்ல — தனித் தமிழ் ஈழமே, தமிழ்தேசிய இனத்தின் ஒரே இலட்சியம் என்பதையும் எவ்வித ஐயத்துக்குமிடமின்றி கோடு கிழித்துக்காட்டி விட்டார்கள்!

நண்பா, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி — என்று கூறுவார்களே அதே போல—தனித் தமிழ் நாடு கோரிக்கை காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மிகவும் உக்கிரமாக முன்வைக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் சிங்களக்கூட்டணியினரே! தனிநாடுதான் தமிழர் கூட்டணியின் கோரிக்கையென்பதை தந்தை செல்வா தமது வாயாலே கூறுவாரா என்று அரசு வேட்பாளர் வி. பொன்னம்பலம் ஒரு கூட்டத்தில் சவால் விட—ஆம், தனிநாடுதான் எங்கள் இலட்சியம்; தேசிய அரசுப்பேரவைக்கு சென்றவுடன் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்துவேன்" என்று தந்தை செல்வா திட்டவட்டமாக அதற்கு பதிலிறுத்திட—அதன் பின்னரே காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தனிநாடு கோரிக்கை அதி முக்கியத்துவம் பெறத்தொடங்கியது என்பதை நீ மறந்திருக்கமாட்டாய்!

தனிநாடு கோரிக்கையை இடைத்தேர்தலில் முக்கிய பிரச்சினையாக்கி — அதற்கெதிராக தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிங்கள அமைச்சர்கள் மிகவும் தீவிரமாக பிரச்சாரம் செய்தார்கள்!

குமாரசூரியர்,
பீட்டர் கெனமன்,
இலங்கரத்தின,
கொல்வின் ஆர். டி. சில்வா,
டாக்டர் என். எம். பெரேரா,
கொப்பேகடுவ,
சுபசிங்கா,
கே. பி. இரத்தினாயகா,
டாக்டர் விக்கிரமசிங்கா,
துடாவை,
வில்லியன் குணவர்த்தன,
[illegible],
[illegible] பண்டாரநாயகா,
குமார் ரூபசிங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும் இன்னும் பல குட்டித்தலைவர்களும் தனிநாடு கோரிக்கைக்கு எதிராக காங்கேசன்துறையில் நின்று விஷம் கக்கினார்கள்—அச்சுறுத்திப் பார்த்தார்கள்; 1958 என்று பயம் காட்டினார்கள்! தனிநாடு—தமிழ் ஈழம் அமைந்தால், வடக்குகிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழர் நிலை என்னவது என்று—ஆட்டுக்குட்டிக்கு அனுதாபம் காட்டிய ஓநாய்போல—சிங்கள நாட்டில் வாழும் தமிழினத்தில் நலனைக் கவனிப்பவர்கள் போல் பாசாங்கு காட்டினார்கள்! வடக்கு கிழக்குப் பிரிந்தால் வாழமுடியாது என்றார்கள்—

தனிநாடு கோரும் தந்தை செல்வாவை தெரிவு செய்தால்—1958 இனக்கலவரம் மீண்டும் வெடிக்கும் என்று காங்கேசன்துறை வாக்காளர்களை அச்சுறுத்தியது —அனுராகம் பாடியது— ஒரு குட்டிப் பிசாசு!

1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் போதாவது தமிழர்கள் உயிருடன் தென்னிலங்கையிலிருந்து திரும்பிவந்தார்கள்—இனி அப்படியொரு நிலைவந்தால் சிங்கள நாட்டிலிருக்கும் தமிழர்களின் தோல் உரிக்கப்படும் என்று மிரட்டிப் பார்த்தது ஒரு இராட்டைக் கல்லாந்தி!

எங்களுக்கு மூன்றில இரண்டு பங்கு பெரும்பான்மைபலம் உண்டு; நாங்கள் நினைத்தால் தமிழர்களது நாக்குகளையே துண்டுபோடவும் சட்டம் கொண்டுவரமுடியும்—ஆனாலும் நாங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை—என்று கூறி தமிழன் மீது தங்களுக்கிருக்கும் "இரக்கத்தை" பரப்பிக்காட்டியது ஒரு [illegible] பிராணி!

தமிழரசுக்கட்சிக்காரர்களுக்கு, நாங்களாக இருந்தால் செருப்பு கொடுப்போம் என்று இறுமாப்புடன் பேசியது ஒரு விஷப் பாம்பு!

ஆம் நண்பா, காங்கேசன்துறை இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது — சிங்கள ஏகாதிபத்தியம் உபயோகித்த இறுதி ஆயுதம் இதுதான்! தமிழ் ஈழத்துக்கு வெளியே —சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் உயிரை — உடமைகளைக் காட்டி—காங்கேசன்துறைத்தொகுதித் தமிழ் மக்களை அரசியல்ரீதியாக "பிளாக் மெயில்" (Political Black mail) பண்ணி— அவர்களை சுதந்திரப் பாதையிலிருந்து பிரித்து அடிமைத்தனத்துக்குள் தள்ளி வீழ்த்த சிங்கள ஏகாதிபத்தியம் கையாண்ட இறுதி முயற்சி அவர்களுக்கு எதிராகவே முடிந்து விட்டது!

இன்றைக்கு மட்டுமல்ல — என்றைக்குமே சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ்ஈழசுதந்திரக்கோரிக்கையை—உரிமைப் போராட்டத்தை நசுக்கிட—சிங்கள நாட்டில் வாழும் தமிழர்களின் வாழ்வைத்தான் பணயப்பொருளாக வைத்திட முயற்சிக்கிறது; முயற்சிக்கும்!

ஆனாலும்—உள்ள உயிர் ஒன்றுதான்—அது போகப்போவதும் ஒரு தடவைதான் — அது தமிழ் ஈழத்தின் விடுதலைக்காகப் போனால் போகட்டும் என்ற முடிவுடன்—சிங்கள ஏகாதிபத்தியத்தின் இவ்வித "பிளாக்மெயில்" பயமுறுத்தல்களுக்கு சிறிதளவும் தலைவணங்காது—காங்கேசன்துறையின் 73வீதமான வீரத் தமிழர்கள் தனித்தமிழ் நாடு கோரிக்கையை ஆதரித்து தங்கள் ஒப்புதலை அளித்திருக்கின்றனர்!

ஆம் நண்பா, காங்கேசன்துறைத் தொகுதியில் பெப்ரவரி ஆறும் நாள் மூண்டெழுந்துள்ள சுதந்திரத் தீ — இனி தமிழ் ஈழம் முழுவதும் பற்றிப் பிடிக்கட்டும்! எங்கும் விடுதலை முரசம் முழங்கட்டும்! இந்தியதேசிய காங்கிரஸ் வெள்ளையனே வெளியேறு என்று தீர்மானம் போட்டது போல் சிங்கள ஏகாதிபத்தியமே தமிழ் ஈழத்திலிருந்து வெளியேறு (Quit Tamil Eelam) என்று நம் தமிழர் கூட்டணி தீர்மானம் போடும் நாள் விரைந்து வரட்டும்; இனவிடுதலைக்காக எதையும் தாங்கிடத் தயாராவோம்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

# எண்ணம்

## ஆரம்பப் பணிகள்

காங்கேசன்துறைத் தொகுதியில் இரண்டரை ஆண்டுகளுக்குப்பின்பு நடந்து முடிந்த இடைத்தேர்தலில் தமிழ் மக்கள் மிகத்தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தீர்க்கமாகவும் ஆணித்தரமாகவும் அளித்துள்ள தீர்ப்பு இரண்டு உண்மைகளை இந்நாட்டுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் முன்வைத்திருக்கிறது.

தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறாமலும், அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாமலும்—1972ம் ஆண்டு மே 22ம் நாள் சிங்களப்பெரும்பான்மையினரால் ஏகேச்சாதிகாரமாக உருவாக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டத்தை இந்நாட்டுத் தமிழினம் முற்று முழுதாக நிராகரித்துவிட்டது; இந்த அரசியல் சட்டம் தமிழினத்தை அழித்தொழித்துப் புதைகுழிக்கு அனுப்பும் அடிமைச்சாசனம் என்று இந்நாட்டுத் தமிழ் மக்கள் தீர்க்கமாக நம்புகிறார்கள்; புதிய அரசியல் சட்டம் தங்கள் மீது திணிக்கப்படுவதை தமிழ் மக்கள் கடைசிவரையும் எதிர்த்து மூர்த்தண்யமாகப் போராடுவதற்கு திடங்கொண்டு நிற்கிறார்கள்; புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற அரசின் வாதம் கடைந்தெடுத்த பொய்; என்பதையெல்லாம் காங்கேசன்துறைத் தொகுதியின் 73 சதவீதமான வாக்காளர்கள் எவ்வித ஐயத்துக்குமிடமின்றி எடுத்துக் காட்டிவிட்டார்கள்!

அது மட்டுமின்றி—புதிய சிங்கள ஏகாதிபத்திய அரசியல் சட்டத்தின் கோரப்பிடியிலிருந்து தமிழ்த்தேசிய இனம் மீட்சிபெறுவதற்கு—தப்பிப் பிழைப்பதற்கு—அது செல்லவேண்டிய பாதையென்ன—மேற்கொள்ள வேண்டிய மாற்று நடவடிக்கையென்ன என்பதையும் காங்கேசன்துறைத் தொகுதி தமிழ் மக்கள்—இந்நாட்டில் வாழும் 35 இலட்சம் தமிழினத்தார் சார்பிலும்—திட்டவட்டமாக அறுதியிட்டு கோடிழித்துக் காட்டியிருக்கிறார்கள்!

தமிழ் மக்கள் அந்நிய ஏகாதிபத்தியத்திடம் அன்று பறிகொடுத்த தங்கள் சொந்தத் தாயகத்தை—சொந்த திருநாட்டை—தமிழ் ஈழத்தை—சுயாதீனமுள்ள சுதந்திர நாடாக மீண்டும் மலரச் செய்வதுதான் தமிழினமும், தமிழும், தமிழ் கலாசாரமும், தமிழர் கலையும் தமிழர் நிலமும் தப்பிப் பிழைக்கவும், தலைநிமிர்ந்து வாழவும் எமக்கு எதிரே எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு வழியென்பதை காங்கேசன்துறை தொகுதி தமிழர்கள் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல—நாடு முழுவதும் கொதித்துக் குமுறிக்கொண்டிருக்கும் 35 இலட்சம் தமிழ் இதயங்களின் துடிப்பை—இதயதாகத்தை—பிரதிபலித்துக்காட்டியுள்ளனர் காங்கேசன்துறை தொகுதி வாக்காளர்கள்!

அந்நிய ஆங்கில ஆதிக்கம் அகன்ற நேரத்தில்—1833ம் ஆண்டு இருந்ததுபோன்று தங்கள் அரசுரிமையை தங்களிடம் மீள ஒப்படைக்கும்படி இந்நாட்டுத் தமிழ் மக்கள் பிரிட்டிஷாரிடம் கோரிக்கைவிடாமல்—சிங்கள மக்களுடன் ஒரு ஐக்கிய இலங்கையில் ஒற்றுமையாக சமத்துவ அடிப்படையில் வாழ முடியுமா என்பதை கடந்த 25 ஆண்டு காலமாகப் பரீட்சித்துப்பார்த்தார்கள்! ஆனால் அதுவோ விஷப்பரீட்சையாக முடிந்துவிட்டது.

சுதந்திரத்திலிருந்து கிடைத்த அதிகாரத்தைப் பிரயோகித்து—கடந்த 25 ஆண்டு காலமாக சிங்கள இனம்—ஐக்கிய இலங்கை என்ற போர்வைக்குள் மறைந்து நின்று தமிழினத்தினுடைய குடியுரிமை, மொழியுரிமை, நிலவுரிமை, கலாசார உரிமை, கல்வியுரிமை அத்தனையையும் படிப்படியாகப் பறித்து—தமிழினத்தின் எதிர்ப்பை துளியும் பொருட்படுத்தாது இறுதியில் தமிழர்களை அடிமைகளாக்கி அழித்தொழிக்க வழிவகுக்கின்ற புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டுவந்து சிங்கள மக்களுடன் சமத்துவ அடிப்படையில் சமாதான வாழ்வு என்ற பேச்சுக்கு இனிமேலும் இடமேயில்லை என்ற நிலையை சிங்கள மக்களே உருவாக்கிய பின்னர்தான்—தமிழினம் தன்னுடைய சுதந்திரத்தை—ஒரு தனிநாட்டின் மூலம் நிலைநாட்ட உறுதிபூண்டிருக்கிறது.

சத்திய ரீதியாகவும்—உணர்ச்சி ரீதியாகவும்—தனிநாட்டு கொள்கையை தமிழினம் ஏற்றுக்கொண்டுள்ள இந்நேரத்தில், 'தனி நாடு' என்ற தத்துவம் உயிர் பெறுவதற்கு—தமிழன் ஒவ்வொருவனும் தனியாகவும், கூட்டாகவும் இயக்கரீதியாகவும் செய்திடவேண்டிய ஆக்கப் பணிகளைப் பற்றி இனி நாம் சிந்திக்கவேண்டும்! இதில் வெளிநாடுகளில் நாம் மேற்கொள்ளவேண்டிய பிரசாரமே மிகவும் முக்கியமானது; முதன்மையானது.

வெளி நாடுகள் அனைத்தும் இன்றைக்கு 'இலங்கை' என்பது ஒரு நாடு என்றே கருதிக்கொண்டிருக்கின்றன. உலக வரைபடத்திலும்—இலங்கை ஒரு நாடாகவே காணப்படுகிறது. 1833ம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் ஈழம் தனிநாடாக இருந்தது என்கிற உண்மை இன்றைக்கு வெளிநாட்டாரின் கண்களில் இருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மை வெளிநாட்டாரின் கண்களுக்குத் தெரியச் செய்து — ஈழத்துத் தமிழ் மக்கள் புதிதாக நாடு [illegible] எதுவும் கோரவில்லை; அவர்கள் 1833ம் ஆண்டுக்கு முன்பிருந்த தங்கள் அரசுரிமையையே மீண்டும் இந்நாட்டில் தங்கள் தமிழ் ஈழத்தை தாங்களே ஆட்சி செய்ய விரும்புகிறார்கள் என்கிற உண்மை வெளிநாட்டாருக்கு எடுத்துரைக்கப்பட வேண்டும். இது தமிழர் கூட்டணிக்கும், வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களினதும் முதற் கடமையாகும்!

இந்த நேரத்தில்—மற்றோர் முக்கியமான ஆரம்பப் பணியை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். ஒரு நாட்டை மீட்கும் பணி—சாதகத்தை அமைக்கும் பணி—[illegible] அடைய வேண்டுமானால் முதலில் நமக்குள் ஒற்றுமையும், ஐக்கியமும் சகோதரத்துவமும் இருக்கவேண்டும். தமிழினத்துக்குள்ளே சாபத்கேடாக—தமிழ் சமுதாயத்தை மெல்லமெல்லக் கொல்லுகின்ற கொடிய நஞ்சாக—இருந்து வருகின்ற சாதியை—தீண்டாமையை வேரோடு கெல்லி எறிய இயக்கரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒவ்வொரு தமிழனும் முன்வரவேண்டும். இது மிகவும் முக்கியமானது.

தனிநாடு வந்தால்—தாழ்த்தப்பட்டவர்கள் என்று அழைக்கப்படும் தமிழர்கள் மேலும் மேலும் நசுக்கப்படுவார்கள் என்று எதிரிகள் நடத்தும் பொய்ப்பிரசாரத்தை நாள் தாளாக்குவதற்கு ஒரேவழி சாதியை சாகடிப்பதே. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருக்கக்கூடிய வீரத் தமிழ் இளைஞர்களுக்கு விடுதலை இயக்கத்தில் முதலிடம் கொடுத்து—அவர்களது அநுலசியமான அச்சத்தைக் களைந்தெறியவேண்டும்!

இதே போல்—யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு திருகோணமலை, வவுனியா, மலைநாடு என்கிற பிரதேச பிரிவினைகளும்—இந்துக்கள், இஸ்லாமியர், கிறித்தவர் என்கிற மதவேறுபாடுகளும் முற்றாக களைந்தெறியப்பட்டு தமிழினம் புதிய முறுக்கேறிய சக்திவாய்ந்த வலிமைமிக்க இனமாக — கட்டுக்கோப்புள்ள இனமாக — திரண்டெழ வேண்டும்!

தனித் தமிழ் நாடு [illegible] சென்றடைவதற்கு [illegible] அமையவேண்டும் என்று நாம் கருதுகிறோம்!

---

# "கொல்வின் கூற்று உண்மையாகப்போகிறது!

# ஒரு மொழிக்கொள்கையால் நாடு விரைவில் இரண்டுபடும்"

## தேசிய பேரவையில் நவம் முழக்கம்!

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு இந்த விவாதத்தில் பங்கு பற்றிய அத்தனை பேரும் இன்று இந்த சபையில் சத்தியப்பிரமாணம் செய்த எனது தலைவர், தமிழர் கூட்டணிமுதல்வர், இந்த நாட்டின் தமிழ் மக்களுடைய சுதந்திர உணர்வின் அடையாளமாக இருக்கும் மூதறிஞர் திரு. செல்வநாயகம் அவர்களை இந்த சபையில் மறுபடியும் வரவேற்றார்கள்.

மூதறிஞர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஏறக்குறைய இரண்டரை வருடம் இந்தச் சபைக்கு வெளியில் இருந்த காலத்தில் தமிழர் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவின் தற்காலிக தலைவர் பதவியில் இருந்த நானும் இந்த நேரத்தில் எங்கள் ஈழத்து காந்தியை—துயரப்பட்டிருந்த தமிழ் மக்களை ஒரு கோரிக்கையின் கீழ் ஒன்றுசேர்த்து — இந்த நாட்டு தமிழ் மக்களை பூரண அடிமைகள் ஆக்கிய அரசியல் சாசனத்தை எதிர்த்து இந்த சபையிலே 1972ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி இந்த அரசாங்கம் கொண்டு வந்த அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றார்கள் என சவால்விட்டு — அதை நிரூபிக்க தனது பதவியை இராஜினாமா செய்தார் என் தலைவர்.

எந்த விதமான காரணமுமில்லாமல் இன்று இருந்தப்படுகின்ற அரசியல் அமைப்பிலே இருக்கின்ற அம்சங்களுக்கு முரண்பாடாக சர்வதேச மனித அடிப்படை உரிமைக்கு மாறாக — சாட்டுக்காரணங்களை காட்டி ஆட்சியாளர் காங்கேசன் இடைத் தேர்தலை இரண்டரை வருடம் ஒத்திவைத்த போதிலும்—தேர்தல் நடக்கின்ற பொழுது எங்கள் மூதறிஞர் செல்வநாயகம் தேர்தலிலே இதே பிரச்சினையை முன்வைத்து "இந்த அரசியல் சாசனத்தை தமிழ் மக்கள் எதிர்த்தால் என்ன ஆதரியுங்கள்" எனக் கூறி—தமிழ் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று காங்கேசன்துறை தொகுதியின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டதும்—இத் தேர்தல் முடிவானது நாட்டின் சுதந்திரத்தின் மூலம் மீண்டும் நாம் பெற்ற அரசுரிமையை தமிழ் ஈழத் தேசிய இனம் தானே பிரயோகித்து தன் சுதந்திரத்தை நிலை நாட்ட எனக்கு கொடுத்த கட்டளை என்று எனது மக்களுக்கும் இந் நாட்டிற்கும் இதனால் அறிவிக்கிறேன்." என வீர முழக்கம் செய்து — "இக் கட்டளையை நிறைவேற்ற நானும் தமிழர் கூட்டணியும் இடையறாது உழைப்போம்" என உறுதி கூறி இன்று இந்த கட்டளையை நிறைவேற்ற இந்த சபைக்கு திரும்பவும் வந்திருக்கும் தந்தை செல்வா அவர்களை நானும் மனமார வரவேற்கின்றேன்.

இன்று பேசிய கௌரவ பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி உள்நாட்டு விவகார அமைச்சர் — "அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்ற கட்டளையை ஏற்று வந்ததற்குப் பிறகும் — திரும்பவும் இந்தச் சபையில் தந்தை செல்வா அவர்கள் அதே அரசியல் அமைப்புக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்திருக்கிறார்" என கேலியாக கூறினார்.



எனது நண்பர் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியது போல 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப்பின் "யாட்சியை தங்கிய எலிசபெத் இராணியை தூக்கி வீசிவிட்டு இந்த நாட்டில் ஓர் குடியரசை அமைப்போம்" என கூறி இந்தக் கட்டடத்துக்குள்ளே நுழைந்து அதே இராணிக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்து அடுத்தகணமே இராணியை எப்படி தூக்கி வீசினீர்களோ அந்த அடிப்படையிலேயே மூதறிஞர் செல்வா அவர்கள் இன்று சத்தியப்பிரமாணம் செய்தார் என்பதை கூறி வைக்க விரும்புகின்றேன்.

சபாநாயகர் அவர்களே, புதிய அரசியல் அமைப்பின் முதலாவது திருத்த மசோதாவை விவாதிக்கின்ற இந்த நேரத்திலே—இந்த அரசியல் அமைப்பை பற்றி முழுமையாக ஆராயவேண்டிய கடமை ஒன்று எமக்கு இருக்கின்றது. இந்த நாட்டிலே இரு இனங்கள் வாழ்கின்றார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்த நாட்டிலே வசிக்கின்ற ஒரு இனம் நாட்டின் அரசியல் அமைப்பை பூரணமாக நிராகரிக்கின்ற நேரத்திலே இந்த நிராகரிப்பினால் ஏற்படுகின்ற விளைவுகளை நாம் பொறுப்புணர்ச்சியோடு ஆராய்ந்து சிந்தித்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், ஏற்படுகின்ற விளைவுகளை இந்த சபைக்கும் இந்த அரசாங்கத்திற்கும் எடுத்துக்காட்டவேண்டிய கடமை எமக்குஇருக்கின்றது.

தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களினாலே தனக்குக் கொடுக்கப்பட்ட புதிய கட்டளையைப்பற்றி கூறி இருக்கிறார். தமிழ் மக்களுடைய அரசியலிலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை சபாநாயகர் அவர்களே, நீங்களும் இந்த நாட்டு அரசாங்கமும் கவனிக்காமல் இருக்க முடியாது.

சபாநாயகர் அவர்களே, இந்த நேரத்திலே தமிழ் மக்களுடைய அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்ற பொழுது நான் மிகவும் பணிவாகவும் பயபக்தியுடனும் இந்த நாட்டின் அரசியலுக்கு பொறுப்பாக இருப்பவர்களுக்கு வற்புறுத்திக் கூற விரும்புவது "நீங்கள் இந்த நாட்டிலே வசிக்கின்ற தமிழ் மக்களை, நியாயமான முறையிலே அவர்களுடைய மொழிக்கு தகுந்த இடம் கொடுத்து அவர்களுடைய மதத்திற்கு தகுந்த பாதுகாப்பு கொடுத்து — நாங்களும் இந்த நாட்டு மக்கள் நாங்களும் இந்த நாட்டை ஆளுகின்றோம் என்ற நிலையை ஏற்படுத்தாவிட்டால்—நிச்சயமாக 1956ம் ஆண்டிலே இன்று அரசியல் அமைப்புக்கு பொறுப்பாக இருக்கின்ற கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அன்று பிரதமராய் இருந்து காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவிற்கு என்ன கூறினாரோ அந்த நிலை நாட்டில் ஏற்படும். அவர் கூறியதாவது "One Language Two Nations, Two Languages One Nation One Language Two States Two Languagse One State."

அன்று 1956ம் ஆண்டு கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா எந்த நிலை ஏற்படும் என தீர்க்கதரிசனம் கூறினாரோ அந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் மனநிலையை அறிந்த பின்னாவது நன்கு ஆராய்ந்து சிந்தித்து இந்த நாட்டின் அரசியல் அமைப்பிலே ஒரு சிறிய அம்சத்தை மட்டுமல்ல—மிகவும் முக்கியமான தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அரசியல் அமைப்பிலே திருத்தங்கள் செய்யாவிட்டால், 1956ம் ஆண்டு கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா கூறிய தீர்க்கதரிசனம் நடந்தே தீரும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

(—11—2—75 ஆற்றிய உரை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தின் அரசுரிமையை நிலைநாட்டி தமிழினத்தின் சுதந்திரத்தை மீட்பதே தமிழ் மக்கள் எனக்கிட்டுள்ள கட்டளை!

## தமிழ்ஈழ முதல்வரின் அதிமுக்கிய அறிக்கை!

தமிழ் சமுதாயத்தின் வரலாற்றில் மிக முக்கிய முடிவு எடுக்க வேண்டிய இத்தருணத்தில் என்மீதும் தமிழர் கூட்டணி மீதும் தங்களுக்கிருக்கும் பூரண நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ள எனது வாக்காளர்களுக்கு முதலில் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். சர்வவல்லமையும் படைத்த அரசாங்கத்தை எதிர்த்து நான் நடத்திய இந்த இயக்கத்திற்கு தங்கள் ஒன்றுபட்ட ஆதரவை தந்த நாடு முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கு என்னுடைய நன்றி உரித்தாகட்டும்!

1972ம் ஆண்டு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டம் அவர்களால் முழுக்கமுழுக்க ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என்பதை ஆட்சியாளர்களுக்கும், இந்நாட்டு மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த இடைத்தேர்தல் என்னால் உருவாக்கப்பட்டது என்பதை நான் உங்களுக்கு நினைவு படுத்த வேண்டியதில்லை! புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்து நீங்கள் அளித்துள்ள மிகப்பெரும்பான்மையான தீர்ப்பின் மூலம்—நான் எடுத்த நிலையும் எனது மக்கள் மீது நான் கொண்டிருந்த நம்பிக்கையும் மிகவும் சரியானது என்பதை உறுதிப்படுத்திவிட்டீர்கள்! இது எனக்கு தனிப்பட்ட முறையிலும் திருப்தியை அளிக்கிறது.

அந்நிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் வரை — சிங்களவர்களும் தமிழர்களும் ஆண்டாண்டு காலமாக இந்நாட்டில் சுயாதிபத்தியமும் இறைமையுமுள்ள வெவ்வேறு இனங்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தாங்கள் இழந்துவிட்ட சுதந்திரத்தை மீட்கமுடியும் என்கிற முழு நம்பிக்கையுடன் அந்நிய ஆதிக்கத்தை விரட்டும் போராட்டத்தில் தமிழர்கள் முன்னணி வகித்தனர் என்பதையும் நினைவு கூருவது அவசியமாகிறது.

ஐக்கிய இலங்கையில் சிங்களவர்களுடன் சமத்துவ அடிப்படையில் எங்கள் அரசியலுரிமைகளை நிலைநாட்டுவதற்கு கடந்த கால் நூற்றாண்டாக ஒவ்வொரு முயற்சியும் எடுத்தோம். ஆனால் சுதந்திரத்திலிருந்து பொங்கிப் பிரவாகித்த அதிகாரத்தை—தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எங்கள் அடிப்படை உரிமைகளை பறிக்கவும் எங்களை அடிமைகள் எனும் நிலைக்கு தள்ளவுமே உபயோகித்து வந்திருக்கின்றன. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவானதாக இருக்கும் சுயாதிபத்திய அரசுரிமையை — தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியே சிங்கள அரசாங்கங்கள் இவற்றைச் செய்ய முடிந்திருக்கிறது.

தமிழ்ஈழத் தேசிய இனம், தனக்குள்ள சுயாதிபத்திய அரசுரிமையைப் பிரயோகித்து தனது சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே இந்த தேர்தல் மூலம் மக்கள் எனக்கு இட்ட கட்டளையாகும். இதை எனது மக்களுக்கும் நாட்டுக்கும் அறியத் தருகிறேன். தமிழர் கூட்டணி இந்தக் கட்டளையை நிறைவேற்ற தொடர்ந்து பாடுபடும் என்றும் உறுதி கூறுகிறேன்.

**சா. ஜே. வே. செல்வநாயகம்**

### ஐ. நா. நாட்டு சபை

—1-ம் பக்கத் தொடர்

வையின் செயலாளருக்கு, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நீண்ட மகஜர் ஒன்றை அயாரித்து ஐ. நா. சபையின் மனித உரிமைக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு 1948ம் ஆண்டு முதல் மாறி மாறி வந்த சிங்கள அரசாங்கங்கள் இழைத்துவரும் கொடுமைகளையும், 1972ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் சாசனத்தைப் பற்றியும் அதை எதிர்த்து தமிழ் மக்கள் அனைவரும் தமிழர் கூட்டணியின் கீழ் இணைந்து ஒன்றுபட்டு போராடி வருவதையும் விபரமாக குறிப்பிட்டுள்ள இம்மகஜரில், பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

"இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 பெப்ரவரி 4ம் நாள் முதல் தமிழர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காக போராடிவருகிறார்கள். தமிழர்கள் தங்கள் பிறப்புரிமைக்காக நடத்திவரும் இப்போராட்டங்களின் மீது ஐ. நா. சபை உட்பட, உலக நாடுகள் அனைத்தும் இதுவரை காலமும் கவனம் செலுத்தத்தவறிவிட்டன. 6-2-75ல் இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து போட்டியிட்ட தமிழர் கூட்டணித் தலைவர் திரு. செல்வநாயகம், 16,000க்கு அதிகமான பெரும்பான்மை வாக்குகளால் வ.பொ.வை தோற்கடித்திருக்கிறார்.

'எனவே பாலஸ்தீனியவிடுதலை இயக்கத் தலைவர், தமது மக்களின் பிரச்சினைகளை எடுத்துச்சொல்வதற்கு ஐ. நா. வுக்கு அழைக்கப்பட்டதுபோல்—25 ஆண்டு காலமாக சுதந்திரத்துக்குப் போராடிவரும் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச்சொல்வதற்கு திரு. செல்வநாயகத்தையும் ஐ. நா. சபைக்கு அழைக்க வேண்டும்.


### அறிமுகம்

"பிறருக்கு நன்மை செய்யும் பொழுது உண்மையில் எனக்கே சேவை செய்து கொள்கிறேன்."

—சுவாமி விவேகானந்தர்.


மில்க் வைற் உற்பத்திப் பொருட்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் இலவச வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச் செய்ய உதவியாயிருக்கும்.

பார்த்து வாங்குங்கள்

"மில்க் வைற்" தயாரிப்புக்களை.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

இரத்மலானை விமான நிலையத்தில் வெற்றி வீரராக வந்திறங்கிய தமிழர் தலைவர் செல்வாவுக்கு தமிழ் மக்கள் கழுத்துநிறைய மலர்மாலை சூட்டி மகிழ்ந்த காட்சி இது.

## பணத்தைவிட வாக்குரிமையே பெரிது என்பதை நிரூபித்தார்!



ஜனநாயக நாடொன்றில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதே அதிமுக்கியமானது — பணத்தை விட முக்கியமானது வாக்குரிமையே என்பதை காங்கேசன்துறை இடைத்தேர்தலின் போது நிரூபித்துக் காட்டிய திரு. வி. லிங்கப்பிரமணியத்தைத் தான் மேலே பார்க்கிறீர்கள்!

கொல்லன்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பு பழைய சோனகத்தெருவில் ஒரு வர்த்தகர். 6-2-75ல் காங்கேசன்துறை இடைத்தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொள்வதற்காக அன்றையாழ் தேவியில் அங்குசெல்ல இருந்த இவர் அதைத் தவறவிட்டுவிட்டார். உடனடியாக கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு டாக்சி ஒன்றில் பிரயாணம் செய்து பி. பகல் 3மணிக்கு வாக்குச் சாவடியில் தனது வாக்கை அளித்தார்!

இதற்கு அவருக்கு செலவான பணம் ரூபா 625-00. பணம் செலவான போதிலும் — தமிழினத்தின் உரிமைக்காக தந்தைசெல்வாவுக்கு வாக்களிக்க வாய்ப்புக் கிடைத்ததே தனக்குபெரிய மகிழ்ச்சியையளிப்பதாக இவர் கூறுகிறார்!

### விதாசாரப்படி . . .

—1-ம் பக்கத் தொடர்

கிடைத்திருக்கிறது. சென்ற பொதுத்தேர்தலில் கிடைத்ததை விட 29சத விகிதமான வாக்குகள் தந்தை செல்வாவுக்கு அதிகரித்திருக்கிறது.

வ. பொ.வுக்கு இடைத்தேர்தலில் கிடைத்த வாக்குகள் 9457. இதுமொத்தமாக வாக்களித்த மக்கள்தொகையில் 26 சதவீதமேயாகும். அதாவது சென்ற 1970 இடைத்தேர்தலில் கிடைத்ததை விட ஒரு சதவீதம் குறைவாகவே இம்முறை வ. பொ.வுக்கு வாக்களித்துள்ளனர்.

இடைத்தேர்தலில் வ. பொ. வின் வாக்குப்பலம் ஒரு சதவீதத்தால் கூட குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குகள் எண்ணிக்கையின்படி பார்த்தால் — தந்தை செல்வாவுக்கு 12407 பேர் 1970 பொதுத்தேர்தலைவிட இந்த இடைத்தேர்தலில் அதிகமாக வாக்களித்துள்ளனர். வ. பொ.வுக்கோ 1393பேரே அதிகப்படி வாக்களித்துள்ளனர். இது தந்தை செல்வாவுக்கு அதிகரித்துள்ள வாக்குகளைவிட பன்னிரண்டில் ஒரு பங்கு மட்டுமே ஆகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தமிழ் நாடு அமைக்கும் பணியில் தமிழர் கூட்டணி துரிதமாக ஈடுபடும்!

## கட்டுவன் வரவேற்புக் கூட்டத்தில் மூதறிஞர் செல்வா உறுதியுரை!

"காங்கேசன்துறை இடைத்தேர்தலில் எனக்குக் கிடைத்தவெற்றி சுதந்திரம் பெறத்துடிக்கும் மானமுள்ள தமிழர்களின் வெற்றியாகும். இவ்வெற்றியை அடுத்து தனித் தமிழ்நாடு காணும் பாதையில் நாம் செல்லவேண்டும். அப்படிச்செல்கிறநேரத்தில் எமக்கு விரோதமான சட்டங்களை நிறைவேற்றி எம்மில் பலரை சிறையில் அடைத்து எமக்கு பல்வேறு கஷ்டங்களையும் சிங்கள ஏகாதிபத்தியம் தந்தே தீரும். அதையெல்லாம் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு தனித்தமிழ் நாட்டை கட்டியெழுப்பும் பணியில் நாளும் தமிழர் கூட்டணியும் மிகவும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம். தமிழினத்தின் சுதந்திரத்தை மீட்பதற்கு எந்தத் தியாகத்துக்கும் தயாராக இருக்கும்படி தமிழ் மக்களை நான் அறை கூவி அழைக்கிறேன்!"

—இவ்வாறு கட்டுவனில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்துக்கு பதிலளித்துப் பேசிய தமிழர் கூட்டணி தலைவரும் காங்கேசன்துறை பா. உ.வுமான மூதறிஞர் தந்தை செல்வா மக்களின் பலத்தகரகோஷத்திடையே குறிப்பிட்டார்.

தந்தை செல்வாவுக்கு இடைத்தேர்தல் கட்டுப்பணத்தை யளித்த கட்டுவன் கிராம மக்களே வெற்றி வாகை சூடிய தந்தைக்கு முதல்வரவேற்பையும்அளித்தனர். கட்டுவன், வர்த்தலைவிளான், மயிலிட்டி தெற்கு, தமிழர் கூட்டணியினரால் அளிக்கப்பட்ட இவ்வரவேற்பு விழாவுக்குமுன்னர், தந்தை செல்வா அவர்கள் கட்டுவன்முனியப்பர் கோவிலடியிலிருந்து கூட்ட மைதானத்துக்கு — அலங்கார வளைவு கட்டவிதிகளின் ஊர்வலத்தடை விதிக்கப்பட்டிருப்பதைப் பொருட்படுத்தாது ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

வழி நெடுகிலும் உள்ள ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பெருந்திரளான ஆண்களும் பெண்களும் குழுமி நின்று பூரண கும்பங்கள் வைத்து மாலைகள் அணிவித்து ஆராத்தியெடுத்து தந்தை செல்வாவுக்கு வரவேற்பு அளித்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஊர்வலத்தில் இளைஞர்களும் இளம் பெண்களும் தமிழ் விடுதலை முழக்கங்களை யெழுப்பியபடி — இளைஞர்கள் தந்தையை தங்கள் தோளில் சுமந்து கூட்ட மைதானத்துக்கு தூக்கி வந்தனர். இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. தாமோதரம் பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திருமதி அமிர்தலிங்கம் வாழ்த்துப்பா ஒன்றை தந்தைக்கு வாசித்தளித்தார்.

தந்தை செல்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இற்றைக்கு 24 வருடங்களுக்குமுன் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாட்டைப் பிரிக்கவேண்டுமென்றோ, அதற்காகவே இந்தக் கட்சியை அமைத்துப் போராட வேண்டுமென்று நாம் அன்றும் நினைக்கவில்லை. என்றும் நினைக்கவில்லை. சமஷ்டி என்னும் இணைப்பாட்சி முறையில் சிங்களவரும், தமிழரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே தமிழரசுக்கட்சி தொடங்கப்பட்டு அதற்காகவே இதுவரை போராடி வந்தோம்.

கடந்த 24 வருடத்தை நாம் திரும்பிப் பார்த்தால் எத்தனையோ ஒப்பந்தங்கள், சமாதானங்கள், பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளோம். தேவையானபோது ஒத்துழைத்திருக்கின்றோம். தேவையானபோது எதிர்த்திருக்கிறோம். ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எமது கொள்கையை ஏற்கவில்லை. தமிழ் இனத்தின்மீது அநீதிகளைச் சுமத்தி அடிமைகளாகப் பாவிக்கிறது. ஆகவேதான் இனியும் நாம் பொறுத்திருக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே விடுதலைபெற்ற மக்களாக நாம் வாழவேண்டுமென்பதற்காக, அதற்கு வேண்டிய தனிநாட்டை உருவாக்க முனைந்து நிற்கின்றோம்."

இக்கூட்டத்தில் நாவலர் அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"ஓர் இனம் தனது சுதந்திரத்தைப் பெறத் துணிந்து விட்டால் — ஒவ்வொரு பேதங்களைக் காட்டிப் பிரிந்து வாழ்வதைத் தவிர்த்து— ஒற்றுமையாக ஒரு சொல்லின்கீழ் திரளுவதே முதலாவது நடவடிக்கையாகும். வங்காள தேசத்திலே சுதந்திரம் பெறுவதற்கு நடந்த தேர்தலில் அந்த நாட்டு மக்கள் ஒன்றுசேர்ந்து முஜிபுர் ரகுமானுடையகட்சிக்கு 98 வீத வெற்றியை அளித்து சுதந்திரம்பெறத் துணிந்து விட்டோம் என எடுத்துக் காட்டினார்கள். அதுபோன்று நாமும் எமது ஒற்றுமையை பலப்படுத்தவேண்டும்.

இத்தேர்தலில் எமக்கெதிராக விழுந்த 28சத வீத வாக்குகள் குறித்து நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களையும் எமது வழிக்கு மனம்மாற்ற எமது இயக்கத்தை ஒற்றுமைப்பட்ட ஓர் இயக்கமாக மாற்றவேண்டியது அவசியம். அவர்களையும் அன்புமார்க்கமாக திருத்தி எமது அணியில் இணைத்துக் கொள்ளவேண்டும். அவர்களையும் எமது அணியில் சேர்த்து எமது இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல வாலிபர்கள் யுவதிகள் யாவரும் தயாராக வேண்டும்.

### புரட்சிக்கொடி தூக்கிவிட்டோம்!

எமது இயக்கம் ஒரு தேர்தல் இயக்கமல்ல; எமது உரிமையைப்பெறுவதற்காக புரட்சிக்கொடியை தூக்கி விட்டோம். புரட்சி பேசியோரெல்லாம் இன்று சிறு சலுகைகளால் வாய்மூடி மௌனிகளாகிவிட்டார்கள். நாம் இன்று அரசாங்கத்தின் அக்கிரமத்தை எதிர்த்தும் எமது சுதந்திரத்தை நிலைநாட்டவும் புரட்சிக்கொடி தூக்கிவிட்டோம். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில் "புரட்சி ஓங்குக" என்று தேரு கூறியது போன்று ஒரு கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். இந்நிலையில் நாம் எதையும் பொருட்படுத்தாது எமது பாதையில் முன்னேறுவோம்!"

கூட்டத்தில் திருவாளர்கள் கா. பொ. இரத்தினம் பா. உ., க. ஜெயக்கொடி பா. உ., வி. என். நவரத்தினம் பா. உ., யாழ் மாநகர சபை முன்னாள் மேயர் சி. நாகராசா, வி. ஆனந்தசங்கரி பா. உ., திருமதி சுந்தரம் பிள்ளை அழகம்மா, சட்டத்தரணி அ. குமரகுரு, சட்டத்தரணி எஸ். சி. சந்திரகாசன், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர்!

> ## பொலீசாருக்கு செல்வா எச்சரிக்கை!
>
> "நான் இந்தக் கூட்டத்தில் பொலிசாருக்கு ஒரு எச்சரிக்கை விடுகிறேன். காங்கேசன்துறைத் தொகுதியில் எங்களை ஆதரித்தவர்களை மாற்றுக்கட்சியினர் பல இடங்களில் தாக்கியுள்ளார்கள். இப்படி செய்பவர்களுக்கு எமது இளைஞர்கள் மாற்று மருந்து கொடுக்காது பொறுமையைக் கடைப்பிடித்துவருகிறார்கள். அவர்கள் பொறுமையிழந்து மாற்று நடவடிக்கையில் இறங்கும் விரும்பத்தகாத சூழ்நிலையை உருவாக்காமல் மாற்றுக்கட்சியினரின் காடைத்தனங்களை அடக்குவது உங்கள் பொறுப்பு!
>
> —கட்டுவன் வரவேற்புக் கூட்டத்தில் மூதறிஞர் செல்வ பேசியது.

> மாவை சேனாதிராஜா சிறையில் இன்று
> **711 நாள்!**

## உதயசூரியன் கொடி பறக்கும் காரில் தமிழ் ஈழ முதல்வர் கொழும்பில் பவனி!

**பு**திய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதை இடைத்தேர்தலில் உறுதிப்படுத்தி—சிங்கள ஏகாதிபத்தியத்தின் இறுப்பொடித்து — மாபெரும் வெற்றிவீரராக கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பிய தமிழ் ஈழத்தின் முதல்வர் மூதறிஞர் செல்வாவுக்கு விமானநிலையத்தில் வைத்து தமிழ் மக்கள் குதூகல வரவேற்பு அளித்தனர்!

சரியாக பிற்பகல் 1.30 மணிக்கு தமிழ் ஈழ முதல்வரை சுமந்துவந்த விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் இறங்கியதும் புன்முறுவல் பூத்த முகத்தினராய், மூதறிஞரும் அவரது அணியாரும் அதிலிருந்து இறங்கினர். அப்போது அங்கு திரண்டிருந்த தமிழர்கள் கரகோஷம் எழுப்பினர்.

மூதறிஞரை வரவேற்க பெருந்தொகையான மாணவ மாணவியரும் சிறுவர் சிறுமியரும் விமான நிலையத்தில் குழுமிநின்றது குறிப்பிடத்தக்கது.

முதலில் திரு. குடுசெட்டியாரும் அதன் பின்னர் நீதியரசர் திரு. வி. மாணிக்க வாசகரும் தமிழ் ஈழ முதல்வருக்கு மாலை அணிந்து வரவேற்றனர். தொடர்ந்து திரு. மு. திருச்செல்வம் கியூ. சி., மு. சிவசிதம்பரம், எம். எஸ். செல்லச்சாமி, ஆர். ஜேசுதாசன், திரு. இ. பேரின்பநாயகம், திரு. க. நவசோதி, கோவை மகேசன், சட்டத்தரணி சி. வி. விவேகானந்தன் ஆகியோருட்பட பல நூற்றுக் கணக்கானோர் தந்தைக்கு மாலை சூட்டினர். திருமதி செல்வநாயகத்துக்கு திருமதி கோவை மகேசன் மலர் மாலை சூட்டினார்.

இவ்வரவேற்பில் இந்து வாலிபர் சங்கத் தலைவர் துரைச்சாமி அவர்கள் மலர் மாலை சூட்டி மகத்தான வரவேற்பளித்தார். திரு. பூபாலப்பிள்ளை, மூர்த்தி, பூ சொக்கலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. இரகுபதிபாலசிறீதரன் தலைமையில் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

"தந்தைசெல்வா வாழ்க, தமிழ் ஈழமுதல்வர் வாழ்க, தமிழ் நாடு அமைப்போம்' எனும் கோஷங்கள் இரத்மலானை விமான நிலையம் அதிரும்வகையில் இளைஞர்களால் எழுப்பப்பட்டது.

இதைத் தொடர்ந்து விமான நிலையத்திலேயே வைத்து தமிழ் ஈழ முதல்வர் மூதறிஞர் செல்வா பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு பேட்டியளித்தார்.

இதைத்தொடர்ந்து உதயசூரியன் கொடி கட்டப்பட்ட கார் ஒன்றில் தந்தை செல்வா அவர்கள் முன்னே செல்ல—தொடர்ந்துமோட்டார் பவனியாக ஏனைய கார்கள் செல்ல— இரத்மலானை நிலையத்திலிருந்து கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது வீடுவரை கார்பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பரிதாபந்துக்குரிய...

—2-ம் பக்கத் தொடர்

கொண்டு வந்தால் எந்தச் சாதாரண மனிதனும் அதைக் கேட்டுத் திகைப்பான். அவற்றை நாம் கூறவேண்டாம். அவர்களுக்குக் காலம் தீர்ப்பளிக்கட்டும்!"

இவ்வாறு தமிழ் மாணவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

> ## இறுதிக்கூட்டத்தில் 30,000 மக்கள்
>
> மூதறிஞர் தந்தை செல்வாவை ஆதரித்து தமிழர் கூட்டணி தெல்லிப்பழையில் 4-2-75ல் நடத்திய இறுதிக் கூட்டத்தில் 30,000க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். எள்போட்டால் எள் விழ இடமின்றி முண்டியடித்துக்கொண்டிருந்து தலைவர்களின் உரைகளைக் கேட்ட இந்த மக்கள் தொகையில் பாதிப்பேர் தாய்க்குலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
>
> இருக்கவும் இடம் கிடைக்காமல் — தெருவோரங்களில் நின்றபடியும் — கூட்ட மைதானத்துக்கு அருகில் நின்ற மரங்களில் ஏறி நின்றும் ஆர்வப்பெருக்குடன் தலைவர்களின் உரைகளை மக்கள் கரகோஷ ஆரவாரத்துடன்—எழுச்சி முழக்கத்துடன்-மெய்மறந்து கேட்டிருந்த காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.
>
> இரவு 11.45 மணிவரை நடைபெற்ற இக்கூட்டத்தில்—கூட்டம் முடியும்வரை மக்கள் கட்டுப்பாடாக அமைதியுடன் இருந்து தலைவர்களின் உரைகளை கேட்டனர்.
>
> ஓர் அரசியல் கூட்டத்துக்கு இவ்வளவு பெரிய மக்கள் கூட்டம் அண்மைக் காலங்களில் திரண்டதில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆதிக்கப்பிடியிலிருந்து தமிழ் ஈழத்தை விடுவிப்பதே இனி எங்கள் இயக்கத்தின் வேலை!

[1949ம் ஆண்டு முதல் தமிழரசுக் கட்சியை மிகத் தீவிரமாக ஆதரித்துவரும் தமிழர் ஒருவர் சுதந்திரன் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இது!

அன்புள்ள கோவை மகேசன் அண்ணா அவர்களுக்கு,

தாங்கள் சுதந்திரன் ஆசிரியராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து ஈழத்தமிழினம் ஒரு புதிய பாதையில் சுதந்திர நாட்டம் கொண்டுள்ளதை யாவரும் அறிவர். முன்பெல்லாம் சிங்கள இனத்தோடு ஒத்துழைத்துத்தான் எமது உரிமைகளைப் பெற விழைந்த தலைவர்களுக்கும் மக்களுக்கும் தாங்கள் புள்ளி விபரங்களுடனும் தக்க ஆதாரத்துடனும் சிங்கள இனத்தின் ஏமாற்று வித்தையை அம்பலப்படுத்தினீர்கள். தமிழினம் முற்றிலும் பிரிந்து தனியாட்சி நடத்திட அத்தகைய முயற்சியில் [illegible] பெரும் முயற்சி [illegible]. இதனால் தங்களுக்கு ஏற்படும் இன்னல்களோ பல.

ஒற்றையாட்சியில் உரிமை பெறுவது போல, இணைப்பாட்சியும் கைவிடப்பட்டு ஒழிந்தொழிந்துவிட்டது. எவ்வளவோ காரம் [illegible] முடிவே [illegible] விட்டோம். ஆனால் தம்மவரில் சிலர் [illegible] தனிநாடு கோருகிறார்களா என்பதில் எனக்கு ஐயம் இருக்கிறது. அவர்கள் தனி மொழி உரிமை, [illegible] உரிமை, கல்வி உரிமை பெறுவதோடு நின்று விடுவார்கள். சிங்கள ஸ்ரீலங்காவுடன் தொடர்புகளை முற்றாகத் துண்டிக்க அவர்கள் முனைவதில்லை. இவர்கள் ஈழத்தமிழினத்தை சிங்கள இனத்தோடு சேர்த்தே அரசியல் பேசுகிறார்கள். ஆனால் நீங்கள்தான் ஈழத்தமிழினத்தை தனியான பாதையில் நடத்திவருகிறீர்கள். நான் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்துக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(1) 15-35 வயது எல்லைக்குட்பட்ட இளைஞர் தமிழ்ப் பிள்ளைகள் முற்றிலும் தனிப்பட்ட சுதந்திர நாடுகோருகிறார்கள். பல தொகுதிகளிலும் அவர்களில் இளைஞர் எழுதும் [illegible] இதையே குறிக்கிறது.

(2) 40 வயதுக்கு மேற்பட்ட தமிழர்களும் இன்று அரசியல் தலைவர்களும் இளம் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் விருப்பத்தையும் மதியாது தமது சுயநலத்துக்காக சிங்கள இனத்திடம் இன உரிமைகளைப் பெறுவதில் முனைய கூடாது. இவற்றைப் பெறுவதில் தலைவர்கள் [illegible] செலுத்தினும் தமிழ் இளைஞர்களின் தனிநாட்டுக் கோரிக்கை திசை திருப்பப்பட்டுவிடும்.

(3) முற்றிலும் வேறுபட்ட (1833வரை இருந்தது போல) தனித்தமிழ் நாடே ஒரேயடியாக எங்கள் குறைகள் அனைத்தையும் நிரந்தரமாகத் தீர்க்கும். அதை விடுத்து ஒற்றையாட்சியிலோ, இணைப்பாட்சியிலோ எமது உரிமைகளைப் பெறுவது அர்த்தமற்ற செயலாகும்.

(4) தனிநாடு அமைத்தால் சிங்கள ஸ்ரீலங்காவிடம் எவ்வித உரிமைகளும் நாம் கேட்கத் தேவையில்லை. மொழியுரிமை, குடியுரிமை, தொழிலுரிமை, கல்வியுரிமை, இன்னும் பல உரிமைகள் நாம் கேட்பதும் அவர்கள் தருவதும்—தனித்தமிழ் நாட்டு மக்களுக்கு ஒவ்வாத காரியங்கள் (சிங்கள ஸ்ரீலங்காவின் இருக்கும் தமிழர்களே இவற்றைக் கேட்க வேண்டியவர்கள்) அப்படிக் கேட்பது பிரான்சை தனது மொழி முதலாம் பல உரிமைகளை ஜேர்மனியிடம் கேட்பது போன்றமானக் கேட்டை செய்வதாகும்.

(5) தனிநாடு அமைத்தாலும் நமது பிரதேசத்தைக் காக்கவும், நமது இராணுவம், பொலிஸ், எல்லைக் காவற்படை, முதலியன அமைக்கவும் அந்நியர் குடியேற்றத்தை அகற்றவும், தடுக்கவும் முடியும்.

(6) எமது விவசாய உற்பத்திப் பொருள்கள், கடற்றொழில், கைத்தொழில் மற்றும் தொழில்களை விருத்தி செய்யலாம்.

(7) பரியால் ஒட்டி [illegible] மட்டும் [illegible] தமிழர் முழுப்பேரும் குடியுரிமை பெறுவர். அவர்கள் சிங்கள ஸ்ரீலங்காவுக்கு உழைத்துக்கொடுத்து அதைக்கொழுக்க வைக்கும் நிலை போய் விடும்.

(8) தனிநாடு அமைக்காவிடின் வடகிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தை அகற்றமுடியாது. வெளி மாகாணத் தமிழரும் இங்கு வர மாட்டார்கள்.

## தனிநாடு அமைத்தால் மட்டுமே நாம் தலை நிமிர்ந்து வாழுவோம்!

(9) தனிநாடு ஏற்பட்டால் எமது நாட்டில் தனித்தமிழும் உலகத்தொடர்புக்காக ஆங்கிலமும் அரசோச்சும். உலக வர்த்தகத்திலும், போக்குவரத்திலும் தாராளமாக ஈடுபடலாம்.

(10) எமது நாட்டுக் கொடி எங்கும் பறப்பதோடு தனித் தமிழ் நாட்டுக் குடிகள் என்ற தனி மதிப்பும் எமக்கு ஏற்படும்.

(11) உலகில் இன்றைய நிலையில் எந்த மொழிபேசும் மக்களுக்கும் சுதந்திர இறைமையோடு கூடிய தனியரசுகள் உண்டு. ஐ. நா. விலும் அங்கத்துவம் உண்டு. ஆனால் தமிழ்மொழிக்கு விழாவெடுத்த முதற்றோன்றிய மூத்த குடியினருக்கு எங்காவது ஒரு தனித்தமிழ் நாடு கிடையாது.

(12) இந்தியத் தமிழகத்திலும் பார்க்க ஈழத்தில் தான் தனித்தமிழ் நாடு இலகுவாக அமைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இந்திய வல்லரசிலிருந்து தமிழ் நாடு பிரிவதிலும் பார்க்க சிங்கள அரசின் பிடியிலிருந்து ஈழத் தமிழ் நாட்டை விடுவிப்பது இலகுவான செயல்.

(13) ஈழத் தமிழகம் அமையும் பட்சத்தில் நாம் உலகத்தமிழருக்கு வழிகாட்டிகளாவோம். மலைநாட்டுத் தமிழர் அனைவரும் இங்கு வாழுவர்.

(14) மலாயா, தென்னாபிரிக்காத் தமிழர் போன்று அயல் நாடொன்றில் குடியேறிய தமிழரல்லர் இலங்கைத் தமிழர். இவர்கள் தமக்கென்று உரிய பழம் பெரும் தமிழ் ஈழத்தில்தான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாடு அமைப்பதில் தாமதம் ஏற்பட்டால் முழுத் தமிழரும் காலகதியில் சிங்களராகிவிடுவர் என்பதில் ஐயமில்லை. இவ்விடயத்தில் தலைவர்களிடம் மேலும் தீவிரமும் செயலூக்கமும் வேண்டும். தலைவர்கள் வெறுமனே பேசிக் காலம் கடத்துகிறார்கள் என இளைஞர் பலர் கருதுகிறார்கள்.

(15) எமது தலைவர்கள் தனிநாடு அமைக்க தீவிரம் காட்டவேண்டும். இவ்வளவு காலமும் சிங்கள அரசுடன் வைத்திருந்த "அரசியல் உறவுகளை" முற்றாக முறித்து புதிய வழியில் செயல்பட வேண்டும். சமரசம் பேசுவதும் போராட்டமென்று காலம் கடத்துவதும் இனி வேண்டாம்.

(16) ஈழத்தமிழர் ஒற்றையாட்சியில் சிங்களவரோடு சமஉரிமைக்குப் போராடுவதும் இணைப்பாட்சியில் பிரதேச அதிகாரம் பெற முயல்வதும், தனிநாடு அமைக்கப் போராடுவதுமாகிய மூன்று போராட்டங்களுக்கும் ஏற்படும் தியாகமும் உயிர்ச்சேதமும் ஒரேயளவினதாகவே இருக்கும். ஏதாவது ஒரு கட்டத்தில் வெளிநாட்டு உதவிகளோடு நாம் போராடி எமது கையோங்கும் சமயத்தில் நாம் ஏன் தனித்தமிழ் நாடு அமைக்கும் வாய்ப்பை இழக்க வேண்டும். மேற்சொன்ன மூன்றிலும் உயர்ந்த இலட்சியமாகிய தனித்தமிழ் நாட்டை ஏன் இழக்கவேண்டும்.

(17) சிங்கள ஸ்ரீலங்காவுடன் எத்தகைய சிறிய தொடர்பு வைப்பினும் அது நமது இனத்துக்கு மீண்டும் அழிவைத்தேடும்.

(18) ஜனவரி 10, 74ல் நமது தமிழ்ப்பெண்கள் வாழ் நகரில் மானபங்கப்பட்டதும் 10 தமிழரின் உயிர் பலிபோனதும் தமிழிளைஞர் சிறைகளில் தினமும் சித்திரவதைப் படுவதும், எம்முடைய தமிழ் நாடு எமது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையை—இழிநிலையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

(19) நாம் சிங்கள மக்களையோ, அவர்களின் அரசியல் வாதிகளையோ குறை கூறக் கூடாது. சும்மா இருந்தவர்களுக்கு தமிழர்களின் தேசஉழைப்பும், மூளையுழைப்பும் தமிழ் [illegible] யும் [illegible] இருந்தார்களா? அவர்கள் எம்மீது ஏறி சவாரி விடுவார்கள் தானே! 1956லேயே நாம் தனியாட்சிப் பிரகடனம் செய்யாததே இவ்வளவு இன்னல்களுக்கும் காரணமாகும்.

(20) தனித் தமிழ் நாடு அமைக்க சிங்களவர் விடமாட்டாரென்றும், அதனால் இரத்த களரி ஏற்படுமென்றும் யாராவது கூறக் கூடும். சிங்கள மக்கள் எதற்குத்தான் இணங்குவார்கள். இன்னமும் சிங்கள மக்களின் மனம் திரும்பும்; நாமும் சமமின்றி உரிமைகள் பெறுவோம் எனக்கூறும் மிதவாதிகள் அரசியலிலிருந்து ஓய்வு பெறட்டும்.

(21) 1972மே மாதத்துக்குப் பிறகு இளைஞர் அரசியலில் முக்கிய பங்கெடுத்து வருகிறார்கள் அவர்களது வருங்காலத்தை உத்தேசித்தே நாம் செயல்பட வேண்டும்.

(22) ஈழத் தமிழரின் போராட்டங்களுக்கு முழு ஆதரவளிக்க பலவெளிநாட்டுத் தமிழர் விரும்புகிறார்கள். ஆனால் எமது இயக்கம் இதில் எடுக்கும் சிரத்தை அவர்களுக்குப் போதிய திருப்தியளிக்கவில்லை. 1931 தொடக்கம் ஈழத்தமிழர் சிங்களவரை எதிர்த்துவிட்டு ஒவ்வொரு கட்டத்திலும் மீண்டும் சமரசம் செய்து சிங்களவரோடு ஒத்துப் போவார்கள் என்ற எண்ணம் தமிழ் நாட்டில் பொதுவாக இருக்கிறது.

(23) இறுதியாக நமது முழு வேலையும், நோக்கமும் ஈழத்தமிழ் நாடு அமைப்பதாக இருக்கவேண்டும். இன்றைக்கு நமது தமிழ்நாடு நமது கட்டுப்பாட்டிலில்லை. அது சிங்கள அரசால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆளப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ளது. அதை விடுவிப்பதே இப்போது எமது வேலை!

---

## புரிந்ததா அம்மையே?

பூட்டிய இரும்புக் கூட்டின்
கதவு திறந்தது! திறந்தது!
சிறுத்தையே வெளியில்
வா! சிந்தை சிலிர்க்க
வரவேற்கிறோம்! வா!
கெடுதலைச் செய்பவர் கெடுவது திண்ணம்,
குற்றம் செய்பவர் குற்றக் கூண்டிலே
மாய்வதும் உறுதி!
குருதியில் கைகளை நனைத்திட விரும்புவோர்
குருதியில் தங்களைக் குளிப்பாட்டிக் கொள்வர்
என்பதுணர்ந்த இலங்கை முதல்வர்
இரண்டரை ஆண்டாய் இருட்சிறை வைத்த
எசிமலைத் தொண்டனை; அரிமாப் புலவனை
விடுதலை செய்தாய்;
மகிழ்கிறோம்; ஆனால்...
முறையிலா அதிகார வெறியினால்
சிறைப்பட்டுள்ள மற்றத் தோழர்கள் எங்கே?
வைக்கோலைக் கொண்டு நெருப்பை அணைப்பதா?
கடலை மேலாடையால் மூடப்பார்ப்பதா?
தன்னை விழுங்குவோர் தன்னையே விழுங்கும்
அடக்கு முறைகளும் ஒடுக்கு முறைகளும்
இடுக்கண் சிறைகளும் என் செய்க்கூடும்?
சாரின் கொடுமையும் இட்லரின் சதியும்
யாகியா, பூட்டோ, நிக்சன் நிமிரும்
கொதித் தெழும் மக்களை மிதிக்க நினைக்கையில்
கொடுமைக் காரரின் கவடுகள் தெரிந்ததா?
மக்களின் உரிமைக் குரலை
அடக்கப் பார்த்ததும் மடக்கப்பார்த்ததும்
அறிவிலிகளின் பெரும் வெற்றிச்செயல் அல்லவா?
கையின் வலிமையிலும் சிந்தனை வலிமையே
கழுத்தை நெரிக்கும் கயிற்றினை அறுக்கும்—
சிரிமாவோ இதை சிந்தனை செய்க
விடுதலை செய்நீர் காசி ஆனந்தனை,
கெடுதலை செய்வதை என்று நிறுத்துவீர்?
படுகொலைக் கட்டம் மடிவதும் எந்நாள்?
போராட்டத்தின் நீரோட்டத்தை
எதிர்த்தவர் வெற்றி எய்தியதில்லை
கல்லினை உடைக்க முட்டையால் முடியுமா?
முன்னேறுக்கு இல்லையேல் பின்னேக்கி அழிவீர்.
உண்மைக் கென்றுமே வெற்றி கிட்டும்
விடுதலைத் தேரினை இழுக்கும்
தடந்தோள் மறவர்
புதுவார்ப்புக் கெழும் எஃகென விரைந்தனர்...
யானையின் உதையை யானைதான் தாங்கும்
பானை தாங்குமா? புரிந்ததா அம்மையே!

—புலவர் வல்வில் ஓரி

(29-12-74 'தீட்டோலை' இதழிலிருந்து எடுத்து அனுப்பியவர் திரு. கிருபா, மூசிரி, தமிழ் நாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# தமிழன் தமிழனாக வாழுவதற்கு அவனுக்கொரு நாடு வேண்டும்!

"தமிழன் தமிழனாக இந் நாட்டில் வாழுவதற்கு தனித் தமிழ் நாடு ஒன்றை அமைத்துக்கொள்வதைத் தவிர இனி நமக்கு வேறு வழி கிடையாது. இந்நாட்டில் சிங்களமக்களுடன் சமமானமாக சமத்துவ அடிப்படையில் எங்கள் உரிமைகளை நிலைநாட்டி — ஐக்கிய இலங்கையில் சரிநிகர் சமானமாக வாழலாம் என்ற நம்பிக்கையுடன் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களுடன் பல்வேறு ஒப்பந்தங்களை செய்தும், ஒத்துழைத்துப் பார்த்தும் அவை ஒன்றுமே பயனளிக்கவில்லை. சிங்கள அரசாங்கம் தமிழினத்தை பூண்டோடு அழித்து விடுவதென்றே கங்கணம் கட்டி நிற்கிறது. இந்த நிலையில் நாங்கள் எங்கள் தமிழ் நாட்டை அமைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்திருக்கிறோம்.

"தனித் தமிழ் நாடு கேட்டு வாங்கும் ஒரு கடைச்சரக்கல்ல. வருடக் கணக்காக நாம் அதற்காகப் போராட வேண்டும்! எண்ணற்ற தியாகங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும். சிறை செல்லவும், சித்திரவதைகளை சந்திக்கவும் நாம் ஆயத்தமாக வேண்டும், பலாத்காரத்தை தவிர்த்து அஹிம்சை வழியிலேயே போராடவேண்டும்!"

—இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினால் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசிய முதறிஞர் செல்வா குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு கொழும்புக் கிளைத் தலைவர் திரு. மூ. திருச்செல்வம் கியூ. சி. தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் உடுப்பிட்டி மு. சிவசிதம்பரம் பேசுகையில் "யாழ்ப்பாணத்தில் அனுரா கூறியபடி 1958ம் ஆண்டுஏற்பட்டதைப்போல மீண்டும் ஒரு இனக்கலவரம் உருவாகுமானால் — அந்த நேரத்தில் நாம் விரும்புகிற தமிழ்நாடு நிச்சயம் உதயமாகும்" என்றார்.

இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் பேசுகையில் — "வடக்கு கிழக்கு தனிநாடாக அமைந்தால் மலையகத்தில் வாழும் தமிழர்களும் தலைநிமிர்ந்துவாழ முடியும்" என்று கூறினார்.

**கொழும்பு பாராட்டு விழாவில் முதறிஞர்!**

திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. பேசுகையில் — இனி தொகுதியில் அடுத்ததேர்தலில் தம்முடன் போட்டியிட்டுப் பார்க்கட்டும் என்று குமாரசூரியருக்கு சவால்விடுத்தார்.

உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் பேசுகையில்— தனித்தமிழ் நாடு விடுதலைப் போராட்டத்திற்கு தேசிய அரசுப்பேரவையை ஒரு பிரசார மேடையாகவே தமிழர் கூட்டணி பயன்படுத்தி வருகிறது என்றார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் பேசுகையில் — ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்னபிழை என்று கேட்டுக்கொண்டிருந்த காலம் மாறி, ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளமுடிவெடுத்துவிட்டது என்பதை காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவு அவனிக்கு உணர்த்திவிட்டது, என்றார்.

மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை பேசுகையில்— எல்லாம தமிழ் இயக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும், ஒவ்வொரு தமிழனும் அரசுடன் கொள்ளும்தொடர்புகளை அனைத்துக்கும் தமிழையே பயன்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில் — 1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டத்தை கொழுத்தி எரித்து தமது எதிர்ப்பைக் காட்டிய தமிழ் மக்கள், காங்கேசன்துறை இடைத்தேர்தலில் சனநாயகமுறைப்படியும் அதை நிராகரித்து விட்டனர் என்றார்.

திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன். கொழும்பு தமிழ் சங்கசெயலாளர் திரு. வைரவப்பிள்ளை ஆகியோரும உரையாற்றினர்.

திரு. இ. பேரின்பநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். இறுதியில திரு. இராசதுரை தமிழ் தேசிய கீதம் இசைத்தார். மண்டபத்தின் உள்ளும் புறமும் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.


இப்பொழுது காட்சிதருகிறது 5வது வாரம்

கெபிட்டி

உங்கள் காலிலிருக்கும் செருப்பு உங்களுக்கு சேவை செய்து தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது ஆனால் உங்கள் கையிலிருக்கும் பைப்பு உங்களையே அழிக்கிறது

சாவித்திரி
ஏ. வி. எம். ராஜன்
பிரமிளா
மேஜர்
தேங்காய்சீனிவாசன்
எம். ஆர் ஆர். வாசு
—நடித்த—

வீட்டு மாப்பிள்ளை



மலரே நீ என் மலரல்ல......?

ராசி நல்ல ராசி உன்னை மாலையிட்ட மங்கை மகராசி.

2வது வாரம்

செல்லமகால்
வின்சர் (யாழ் நகர்)




எஸ். வி. சுப்பையா,
சிவகுமார்,
கமலஹாசன்,
ஜெயசித்திரா,
ஸ்ரீ வித்தியா,
சுபா
ஜெயசுதா

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
கே. பாலசந்தர்.

ரீகல் நுவரெலியா நெல்சன் திருமலை
திரைகளில் காட்சியளிக்கிறான்!

ராஜ ராஜ சோழன் (கலர்)

வேது வாரம்

கிங்ஸ்லி லிடோ (யாழ் நகர்)

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் நன்மதிப்பை பெற்ற வண்ணச் சித்திரம்.

ஜெமினி, கே. ஆர். விஜயா, ராஜன், சௌகார் ஜானகி, முத்துராமன், நாகேஷ், சிவகுமாரன், சுந்தரராஜன்.
—நடித்த—

தேவரின்

தெய்வம்



(ஈஸ்ட்மென் கலர்)

3-வது வாரம்

கெப்பிட்டல் பிளாஸா
வெலிங்டன்

ஸ்ரீகாந்த், பிரமிளா, நாகேஷ், குமாரி பானுமதி, சுந்தரராஜன், அசோகன், லக்ஷ்மி (பசு)

தேவரின்

கோமாதா என் குலமாதா

(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில்